<u>சிறப்புக் கூட்டம்</u>

**கூத்தாநல்லூர் நகராட்சியின் 2020ம் ஆண்டு** மார்ச் மாதம் 11 **நாள்** வெள்ளிக்கிழமை **மாலை 4.00 மணிக்கு நடைபெற்ற சிறப்புக் கூட்ட நடவடிக்கைகள்**

| **மன்றக்கூட்டம் நடைபெற்ற நாள்** | **வரிசை எண் மற்றும் மன்ற கூட்டப்பொருள்** | **மன்றத்தின் தீர்மானம்** |
|---|---|---|
| 11.03.2022 | **பொருள் எண் 1**<br>மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தலைமையில் தமிழகத்தில் புதிய அரசு அமைக்க வாக்களித்த தமிழக மக்களுக்கு இந்நகர் மன்றத்தின் சார்பாக மனமார்ந்த நன்றியை இம்மன்றத்தில் முதல் கூட்டத்தின் மூலமாக தெரிவித்துக் கொள்ளப்படுகிறது<br><br>திருவாரூர் மாவட்ட கழக செயலாளர், பூண்டி திரு.கே.கலைவாணன் அவர்களை திருவாரூர் சட்டமன்ற உறுப்பினராக நியமித்த தமிழக முதல்வர் அவர்களுக் , வெற்றி பெறச் செய்த நகரமக்களுக்கும் இந்நகர்மன்றம் தனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.<br><br>கூத்தாநல்லூர் நகர்மன்றத்திற்கு திருமதி.மு.பாத்திமா பஷீரா அவர்களை நகர்மன்ற தலைவராக போட்டியின்றி வெற்றி பெறச் செய்த நகர மக்களுக்கும், இந்நகர்மன்றத்திற்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறது. | **தீர்மானம் எண்:- 01**<br>**ஏற்கப்பட்டது** |

ஆணையர் / தனி அலுவலர்
கூத்தாநல்லூர் நகராட்சி

<u>சாதாரண கூட்டம்</u>

**கூத்தாநல்லூர் நகராட்சியின் 2020ம் ஆண்டு** மார்ச் மாதம் 31 **நாள்** வியாழக்கிழமை மாலை 04.00 **மணிக்கு நடைபெற்ற** சாதாரணக் **கூட்ட நடவடிக்கைகள்**

| **மன்றக்கூட்டம் நடைபெற்ற நாள்** | **வரிசை எண் மற்றும் மன்ற கூட்டப்பொருள்** | **மன்றத்தின் தீர்மானம்** |
|---|---|---|
| 31.03.2022 | **பொருள் எண் 1**<br>நகராட்சி ஆணையர் அவர்களது பிப்ரவரி 2022 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது<br>அலுவலக குறிப்பு :- பதிவு செய்யலாம் (ந.க.எண். 2105/2011/சி1) | **தீர்மானம் எண்:- 02 ஏற்கப்பட்டது** |
| 31.03.2022 | **பொருள் எண் 2**<br>நகராட்சி பொறியாளர் அவர்களது பிப்ரவரி 2022 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது<br>அலுவலக குறிப்பு :- பதிவு செய்யலாம் (ந.க.எண். 2105/2011/சி1) | **தீர்மானம் எண்:- 03 ஏற்கப்பட்டது** |
| | பொருள் எண் 3<br>இந்நகராட்சி பொதுப்பிரிவில் இயங்கி வரும் அலுவலக ஈப்பு எண் TN 50-U-2543 வாகனம் 2011ம் ஆண்டு வாங்கப்பட்டு பயன்பாட்டில் இருந்து வருகிறது. மேற்படி வாகனம் வாங்கி சுமார் பதினொன்று வருடங்கள் ஆகிறது. மேலும் மேற்கண்ட வாகனம் அடிக்கடி பழுதுகள் ஏற்பட்டு வருகிறது. எனவே தற்போது கூத்தாநல்லூர் நகராட்சியில் தேர்ந்தெடுக்கப்பட்ட நகர்மன்ற தலைவர் அவர்களின் அலுவலக பயன்பாடுகளான குடிநீர், பொது சுகாதாரம், தெருவிளக்கு, சாலை வசதிகள் மற்றும் அடிப்படை வசதிகளின் ஆய்வுப் பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளதால் புதிய ஈப்பு வாகனம் தேவைப்படுகிறது. அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.11,00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு மன்றம் அனுமதிக்கலாம். | **தீர்மானம் எண்:- 04 ஏற்கப்பட்டது** |
| | **பொருள் எண் 4**<br>இந்நகராட்சி மூலம் பராமரிக்கப்பட்டு வரும் மரக்கடை பொதுக்கழிப்பிடம் தற்பொழுது நகராட்சி பணியாளர்கள் மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேற்படி பொதுக் கழிப்பிட பராமரிப்பினை நண்பர்கள் சரணாலயம் குழு பராமரிப்பு செய்து கொள்கிறேன் என தெரிவித்து மனு அளித்துள்ளனர். எனவே, மேற்படி கழிப்பிடத்தில் ஏற்படும் சிறிய பழுதுகளை அவ்வப்பொழுது சரி செய்து கொள்ளவும், தினசரி இரண்டுநேரமும் கிருமிநாசினி தெளித்தல், கழிப்பிடம் கழுவ லைசால், பினாயில் செலவு, மின்கட்டணம் செலவு மற்றும் இதர செலவுகள் தாங்களே செய்து | **தீர்மானம் எண்:- 05 ஏற்கப்பட்டது** |

<table>
<tr>
<td></td>
<td>கொள்ளவும் சம்மதம் தெரிவித்தும் மேற்படி குழுவிற்கு லெட்சுமாங்குடி பாலம் அருகில் உள்ள பொது கழிப்பிடம் மற்றும் பராமரிப்பு மேற்கொள்ளும் பணிகளை நண்பர்கள் சரணாலயம் குழு மூலம் செய்து கொள்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு<br>1. மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 151/2022/எச்1)</td>
<td></td>
</tr>
<tr>
<td></td>
<td>பொருள் எண் 5<br>இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் இயங்கி வரும் TN50 AY 2779 என்ற எண்ணுள்ள டிப்பர் லாரி வாகனத்தினை பழுது நீக்கம் செய்து தகுதி சான்று பெற்று தரும் பணிக்கு 11.03.2022ம் தேதி கோரப்பட்ட ஒப்பந்தபுள்ளியில் கீழ்கண்ட நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தபுள்ளிகள் வரப்பெற்றுள்ளது.
<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>மதிப்பீடு தொகை (ரூபாயில்)</th><th>ஒப்பந்ததாரரால் குறிப்பிடப்பட்ட தொகை (ரூபாயில்)</th></tr>
<tr><td>1</td><td>ஆனந்தராஜ் ஆட்டோ டீசல் ஒர்க்ஸ் மன்னார்குடி</td><td rowspan="2">1,20,000/-</td><td>1,19,806/-</td></tr>
<tr><td>2</td><td>கணபதி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ் மன்னார்குடி</td><td>1,27,300/-</td></tr>
</table>
மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் வரிசை எண் 1ல் உள்ள ஆனந்தராஜ் ஆட்டோ டீசல் ஒர்க்ஸ் மன்னார்குடி என்ற நிறுவனத்திடமிருந்து வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளி குறைவாக உள்ளது. எனவே மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>குறைவான ஒப்பந்தபுள்ளியினை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண் 319/2018/எச்1)</td>
<td>தீர்மானம் எண்:- 06<br>ஏற்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | **பொருள் எண் 6**<br>இந்நகராட்சி வரிவிதிப்பாளர்களிடமிருந்து 2021-2022 முதல் மற்றும் இரண்டாம் அரையாண்டு வரை இந்நகராட்சிக்கு செலுத்த வேண்டிய சொத்துவரி, குடிநீர் கட்டணம், தொழில்வரி, காலிமனைவரி மற்றும் வரியில்லா இனங்களின் கட்டணங்கள், நிலுவை மற்றும் நடப்பு வரித்தொகையை செலுத்த கோரி ஒலி பெருக்கி மூலம் விளம்பரம் செய்யப்பட்டு வருகிறது. அதற்கான உத்தேச செலவின தொகையாக ரூ.50,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. செலவினத் தொகையினை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.<br>(ந.க.எண். 053/2021/அ1) | **தீர்மானம் எண்:- 07**<br>**ஏற்கப்பட்டது** |
| | **பொருள் எண் 7**<br>இந்நகராட்சியில் இயங்கி வரும் TN 50 U 2453 ஈப்பு வாகனத்திற்கு ஆயில் சர்வீஸ், நான்கு வீல் பிரேக், கிளர்ச் பிளேட் புதிதாக மாற்றுதல், நான்கு வீல் கிரிஸ் பேக்கிங், கிளப் பிளேட், சஸ்பென்சர் மாற்றுதல் மற்றும் இதர பழுதுகள் நீக்கம் செய்ய அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனமான சிவா ஆட்டோ மொபைல்ஸ் பிரைவேட் லிமிடெட், தஞ்சாவூர் என்ற நிறுவனம் மூலம் பழுதுகள் நீக்கம் செய்யப்பட்டதற்கு பட்டியல் தொகை ரூ.60,570/- வரப்பட்டது. மேற்கண்ட தொகை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>1. மன்றம் அனுமதிக்கலாம். பொதுநிதியின் கீழ் செலவு செய்யலாம்.<br>2. அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று தொகை வழங்குவதற்கும் மன்றம் ஏற்கலாம்.<br>(ந.க.எண். /2022/இ1) | **தீர்மானம் எண்:- 08**<br>**ஏற்கப்பட்டது** |
| | **பொருள் எண் 8**<br>இந்நகராட்சிக்கு உட்பட்ட 1 முதல் 24 வார்டு வரை உள்ள இந்தியா மார்க் II அடிபம்புகள் 137 எண்ணிக்கைகள் உள்ளன. தற்போது கோடைக்காலமாக உள்ளதால் அவற்றில் உள்ள உதிரிபாகங்கள் மற்றும், தண்ணிர் அடி மட்டம் இறங்கியும், உள்ளதாலும் நகரில் உள்ள சில இடங்களில் காணப்படும் இந்தியா மார்க் II அடிபம்புகள் பழுதாகி உபயோகமற்ற நிலையில் பழுதாகி உள்ளது. அவற்றினை சீர் செய்யவும், Comporssor பயன்படுத்தி சுத்தம் செய்யவும் அதற்கான உபகரணங்கள் வாங்கிடவும் ஆகும் மதிப்பீடு ரூ.1.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம். | **தீர்மானம் எண்:- 09**<br>**ஏற்கப்பட்டது** |

| | | |
|---|---|---|
| | **பொருள் எண் 9**<br>இந்நகராட்சிக்குட்பட்ட 1 முதல் 24 வார்டுகளிலும் தினசரி குடிநீர் விநியோகம் சீரான வகையில் 90 LPCD என்கிற விகிதத்தில் வழங்கப்பட்டு வருகிறது. அதற்கான பழைய நகராட்சியில் உள்ள 5.00 இலட்சம் நீர்தேக்க தொட்டியில் ஏற்றப் பயன்படும் 50.000 லிட்டர் கொள்ளளவு கொண்ட தரைமட்ட தொட்டி 12-HP Centrifugal Motor-2 Nos, நகராட்சி அலுவலக ஆழ்துளை கிணறுகளில் உள்ள 7-5 HP Submersible Motor -2 Nos, 5 HP Submersible Motor – 2 Nos, 15 HP Submersible Motor – 1 No, மற்றும் 250MM Sluice Valve – 1 No மேல்கொண்டாழியில் உள்ள 8.00 இலட்சம் நீர்தேக்க தொட்டியில் ஆழ்துளை கிணறுகளில் பயன்படும் 20 HP Submersible -2 Nos, 250MM Sluce Valve – 2 Nos, மற்றும் 10000 கொள்ளளவு கொண்ட நீர்தேக்க தொட்டி 3 எண்ணிக்கையிலும் அதற்கான மோட்டார் 3 HP Submersible – 1 No, 2 HP Submersible Motor, 1 No, 1-5 HP Submersible Motor – 1 No மற்றும் சிறிய மின்விசை பம்புகள் – கம்பர் தெரு, நாகங்குடி, அல்லிக்கேணி குளம், கோரையாறு ஆகிய இடங்களில் 1-5 HP Submersible Motor – 2 Nos, மற்றும் Standby Motors, Fuse Carriers, Starter Genset மின்சார வயர்கள், மற்றும் உதிரிபாகங்கள், லெட்சுமாங்குடி வெண்ணாற்று பாலம் அருகில் உள்ள சுகாதார வளாகம் 2) அக்கரை புதுத்தெருவில் உள்ள சுகாதார வளாகம் 3) காடுவெட்டித்தெருவில் உள்ள சுகாதார வளாகம் 4) தீயணைப்பு துறைக்கு அருகில் உள்ள சுகாதார வளாகம் 5) கோரையாறு வடக்கு தெரு அருகில் உள்ள சுகாதார வளாகம் 6) கோரையாற்றில் உள்ள சுகாதார வளாகம் 7) அவ்வை காலனியில் உள்ள சுகாதார வளாகம் 8) சின்ன கூத்தாநல்லூரில் உள்ள சுகாதார வளாகம் ஆகிய இடங்களில் 1-5 HP Submersible Motors மற்றும் மின்சாதன பொருட்கள் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இவைகளில் அடிக்கடி பழுதுகள் ஏற்படுவதால் உடனே சரி செய்வதில் சிரமம் ஏற்படுகிறது. எனவே பொதுமக்களுக்கு குடிநீர் கொடுப்பதில் சிரமம் ஏற்படாத வகையிலும், மற்றும் இதர பயன்பாட்டிற்காக பயன்படுத்தப்படும் மோட்டார் மற்றும் குடிநீர் நீர்தேக்க தொட்டிகளில் மற்றும் சுகாதார வளாகத்தில் உள்ள மின் சாதன உபகரணங்கள் உடனே சீர் செய்திடவும் இப்பணிக்கான ஒரு ஆண்டு ஒப்பந்த அனுமதி நாள் 04/2022 உடன் முடிவடைவதால் மேலும் ஒன்பது மாத காலத்திற்கு பராமரிப்பு செய்திடவும் அதற்கான தொகை ரூ.6,00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண். 383/2021/இ1) | **தீர்மானம் எண்:- 10**<br>**ஏற்கப்பட்டது** |

ஆணையர் / தனி அலுவலர்
கூத்தாநல்லூர் நகராட்சி